# ALAGAPPA UNIVERSITY

A State University Established in 1985

Vallal Alagappar Valagam

KARAIKUDI 630 003.Tamil Nadu, India

www.alagappauniversity.ac.in

Vallal Dr. RM. Alagappa Chettiyar

| 2017 | 2018 | 2023 | 2018 | 2023 | 2023 |
|---|---|---|---|---|---|
| Accredited with A+ Grade by NAAC (CGPA :3.64) | Graded as Category-1 & Granted Autonomy | Rank: 30 | Swachh Campus Rank : 4 | ASIA Rank : 199 | ASIA Ranking -122 Young Universities Ranking - 138 |

## Department of Journalism & Mass Communication

# இதழி

மின்னிதழ்



E- Magazine

**JANUARY - FEBRUARY 2024**




# வள்ளல் வாழ்த்து

“கோடி கொடுத்த கொடைஞன் குடியிருந்த
வீடும் கொடுத்த விழுத்தெய்வம் - தேடியும்
அள்ளிக்கொடுத்த அழகன் அறிவூட்டும்
வெள்ளி விளக்கே விளக்கு

முன்பெருந் தவத்தால் தோன்றி
முயன்றெமைக் காக்கும் வள்ளல்
அன்பினால் அழகப்பாவின்
அறம்பணி போற்றி செய்வோம்”

# ALAGAPPA UNIVERSITY

## Department of Journalism & Mass Communication



Prof. A.Senthil Rajan
Registrar
CO PATRON



Prof.G.Ravi
Vice-Chancellor
CHIEF PATRON



Prof. N.Arunachalam
HOD i/c
Editor in Chief

## EDITORS :



M. Haribaskar
Teaching Assistant



P. Nagavalli
Teaching Assistant



K.Nirosadevi
Teaching Assistant

## TEAM ITHAZHI



V.Sabarithaa
I MA-JMC



R.Aravind Raj
I MA-JMC



S.Juveriya banu
I MA-JMC



K.Alagumani
I MA-JMC

## CONTENTS


- From the Chief Editor
- Department Events
- Department News
- Department Student Achievements
- Other Activities



# From the Editor in Chief

Dear Readers,

Accreditation pushes institutions to meet and maintain their high standards, in turn increasing trust and confidence in them among the public and boosting accountability. Accreditation is a tool that stakeholders use to monitor, assess, and evaluate the standards and quality of the education a student receives at an institution of higher learning. In this process, Alagappa University is in the fourth cycle of NAAC accreditation, and all the stakeholders are expected to work and prove their achievements with the highest credentials under the able leadership of the Honourable **Vice Chancellor, Prof. G. Ravi.**

Alagappa University, in its quality journey in higher education, shall prove its bench marks through its outcomes for the development of students and the nation with the continued blessings of founder **Vallal Dr. RM. Alagappar**. The Ithazhi e magazine of journalism and mass communication joins with all other stakeholders in the accreditation process of the university and assures to involve them with commitment and dedication, as carried out by the Honourable **Vice Chancellor, Prof. G. Ravi.**

This issue is witnessing the Pongal Celebrations, where everyone expresses their sense of gratitude to agriculture and farm animals at the end of the harvest season, a unique pride of Tamil Nadu, and wishes everyone. Ithazhi astonishing that the future parliamentarians performed and ruled India at Alagappa University in a disciplined democratic way in the youth parliament. Ithazhi had a positive outlook on our future India after witnessing the Youth Parliament at Alagappa University. **Ithazhi** is proud that all the family members of Alagappa University have pledged to vote in an honest way for the development of the nation without any bias or prejudice in the coming elections.

It is the right time to work hard to showcase our achievements and vote honestly in the forthcoming elections. Ithazhi wishes you all.

**Prof. N.Arunachalam**
**HOD i/c**
**Editor in Chief**

## Pongal celebration - 11.01.2024

The Department of Journalism and Mass Communication organized and conducted the Pongal celebration on January 11, 2024, to celebrate the culture of the Tamil community. Students arranged to bring Jallikattu Bull with the motive of creating awareness about the sport. Students gathered in traditional attire, prepared sweet Pongal, and celebrated it according to the traditions. They conducted various games that reflected Tamil traditions.







## Pledge on voting - 24.01.2024



The Department of Journalism and Mass Communication took the "voter's pledge" on January 24, 2024, at 11.30 a.m. as directed by the Secretariat of Higher Education, Public Department. The pledge on voting reminds us of the responsibility of every citizen to form the government through their votes. Dr. N. Arunachalam, Head of the Department, Department of Journalism and Mass Communication, delivered a speech about the importance of voting and democracy.

## ACT NEXT: Nobel Prize in Peace (2023) -24.01.2024

The Department of Commerce and School of Management, organized the ACT NEXT event as a collaborative venture with the Departments of International Business, Women's Studies, Social Work, History, Tourism and Hotel Management, Education (College and Department, Journalism and Mass Communication, and Politics and Public Administration, on January 24, 2024, at the convocation seminar hall.



Dr. S. Ganapathy, Head of the Department, Department of Commerce welcomed the gathering and spoke about the Nobel Prize winner for 2023, Mrs. Narges Mohammadi. Following that, Dr. T. R. Gurumoorthy, Advisor, Centre for Distance and Online Education delivered a speech on the theme of the event. Prof. G. Ravi, vice chancellor of Alagappa University presided over the event. Thiru. Sami Thiravidamani, President, of the Karaikudi Chamber of Commerce and Industry inaugurated the event and delivered the keynote address. He stressed the importance of the role of women in developing world peace.


I MA JMC students (Selvi.V. Sabarithaa, Thiru.V. Senthil Kumaran, and Selvi.G. Kalaiselvi) participated and presented their views on 'world peace'. The students came to know about the origin of the Nobel Prize and the contributions of Nobel Prize winners. Dr. G. Nedumaran, Professor, Department of Commerce expressed his gratitude to all the participants of the event.

## Pledge against Un-touch ability – 30.01.2024



The students of the Department of Journalism and Mass Communication observed silence in the memory of those who sacrificed their lives during the struggle for Indian freedom from 11.00 AM to 11.02 AM on January 30, 2024, and took a pledge against untouchability. This pledge reminds us to live, accept, and respect people beyond their differences. Students were informed about the severity of untouchability in the history of our country. They were educated about the fundamental rights of people and the constitutional aids against untouchability

## "Life skill and Media Education" lecture – 01.02.2024




The Department of Lifelong Learning, in collaboration with the Department of Journalism and Mass Communication, conducted a lecture on life skills and media education by Prof. Mohammod Moninoor Roshid, Professor, University of Dhaka, Bangladesh, on February 1, 2024. Dr. N. Johnson, Head of the Department, Department of Lifelong Learning, welcomed the gathering and spoke about the importance of learning various life skills needed for media employment. Prof. Mohammod Moninoor Roshid, Professor, University of Dhaka, Bangladesh, provided insights on the functioning of media in Bangladesh and the life skills that are taught in media education. He shared his own life experiences with the students during interaction session. Dr. N. Arunachalam, Head of the Department, Department of Journalism and Mass Communication, expressed his gratitude and offered valuable advice to the students on improving their life skills.

## Contemporary Television Editing Technique Workshop – 01.02.2024



The Department of Journalism and Mass Communication conducted a workshop entitled Contemporary Television Editing Techniques by Thiru. S. Iyappan, Editor at Sun TV, Alagappa Alumni, on February 1, 2024. Dr. N. Arunachalam, Head of the Department, Department of Journalism and Mass Communication, welcomed the gathering and spoke about the difference in editing practices in the olden days and the present age. Thiru. S. Iyappan, Editor at Sun TV, lectured the students about various techniques used in television editing. The students had a quality interaction session with the Alagappa alumni and gained insights into the industry standards of editing. He offered guidance to the students regarding employability and successful sustainability in the field. Mrs. K. Nirosa Devi, Teaching Assistant, Department of Journalism and Mass Communication, thanked the guest lecturer and participants of the workshop.

## STEM Education: Issues and Challenges – 02.02.2024



The Department of Education organized a two-day international conference, STEM Education: Issues and Challenges on February 2, 2024, at the convocation seminar hall. Dr. N. Arunachalam, Head of the Department, Department of Journalism and Mass Communication, presented a lecture on 'Discovering Media Literacy' to the students belonging to various departments. He lectured the students about how to perceive the content received from various media platforms. He explained about the functions of media and how a piece of information is expressed through media. The knowledge imparted to the students of various departments benefited them in analyzing news and other content they received from different media sources.

## World Mother Tongue Day - 21.02.2024





Tamil Panpattu Mayyam of Alagappa University conducted various competitions on account of World Mother Tongue Day on February 14, 2024. Selvi. R. Ashika Jasmine received 2nd place in the painting competition and Thiru. R. Abhimanyu received 1st place in the elocution competition. They received their certificates of excellence from Prof. G. Ravi, vice chancellor of Alagappa University, on February 21, 2024, at the convocation seminar hall at the World Mother Tongue Day event.

## National Youth Parliament - 21.02.2024




The National Service Scheme of Alagappa University conducted the Tarun Sabha 3rd edition (National Youth Parliament) on February 21, 2024, at the convocation hall. Selvi.G. Kalaiselvi, Thiru. V. Senthil Kumaran, Selvi. V. Sabarithaa, Selvi. S. Juveriya banu, and Thiru. S. Venkadesh from the Department of Journalism and Mass Communication participated as Youth Parliament members and exhibited their talents. The chief guest of the event, Thiru. Karti. P. Chidambaram, Member of Parliament, appreciated the students' efforts and encouraged them to learn more about politics. He motivated them to be politically responsible citizens who are genuinely concerned about society. He advised the students to have an open-minded approach as future journalists, to understand different perspectives of an incident.







# "OODAGA TAMIL" ONE-DAY CONFERENCE

- 26.02.2024










## Importance of Tamil in modern day media

The Department of Journalism and Mass Communication, in collaboration with the Department of Fine Arts, conducted a one-day conference on "Oodaga Tamil" on February 26, 2024, at the convocation seminar hall. Dr. N. Arunachalam, Head of the Department, Department of Journalism and Mass Communication, welcomed the gathering and spoke about the supremacy of Tamil in recent day media platforms. Prof. G. Ravi, vice chancellor of Alagappa University, delivered the presidential address and stated the importance of improving linguistic ability in one's mother tongue. Special lectures were given to students of various departments by Thiru.M. Murugesan, poet, and Dr. Tamil Silambarasan, director. Both of them stressed to value of Tamil in the media industry. They offered fruitful advice to students of various departments, about handling their life and future profession. They expressed how their linguistic skills in Tamil helped them throughout their career.

Thiru. M. Murugesan, a poet, explained his experience as a journalist in Tamil newspapers and magazines and gained more knowledge in expressing a piece of information effectively in Tamil. Dr. Tamil Silambarasan, a film director, advised the students to explore their talents and learn the minute tricks of that trade. He spoke about Isaipriya (journalist) and successful film-makers like Lenin Bharathi and shared valuable insights from their experience. He initiated an interaction session with the students. Prof. A. Senthilrajan, Registrar of Alagappa University and Dr. S. Rajaram, Head of the Department, Department of Tamil felicitated the gathering. Dr. M. Tamilarasan, Teaching Assistant, Department of Fine Arts expressed his gratitude to the dignitaries participated and other participants of the event.

## “Panromia 2024” – The American College – 29.02.2024




The Department of Visual Communication and the Department of Media Technology of The American College conducted “Panromia 2024” on February 29, 2024 at the American College, Madurai. Selvi. P. Snekapriya, Selvi. R. Ashika Jasmine, Selvi. B. Shajitha barveen, Thiru. A. Sethupathy, and Thiru. S. Venkadesh participated in various competitions in that event. Selvi. B. Shajitha barveen secured 2nd place in the on-spot Radio Jockey competition.

## விடுதலை



தாளமிடு எகத்தாளமிடு
இரவில் வெய்யோன் வந்தான்
எகத்தாளமிடு
தென்பட்ட வன்மங்கள் யாவும்
கொம்பொடிந்து சரிந்ததென
தாளமிடு எகத்தாளமிடு

பாடலிடு புதுப்பாடலிடு
பட்டறிவு பாமரனுக்கும் பிறந்ததென புதுப்பாடலிடு
பல்லாண்டாய் பட்ட அடிமைத்தனம்
பகட்டிழந்து போனதென
பாடலிடு புதுப்பாடலிடு

ஓசையிடு ஆங்கார ஓசையிடு
ஓட்டமெடுத்தன ஓநாய்கள் என ஓசையிடு
ஒற்றைக் குடிமகனுக்கும் உண்டு
ஓசையிடு ஆங்கார ஓசையிடு

சாரமிடு அச்சாரமிடு
சங்கிலிச்சக்திக்குள் புதைந்த கைகள்
சங்கொலித்துச் சத்தமிட்டு
சட்டம்படிக்கப் போகிறதென்பதை
சாரமிடு அச்சாரமிடு

கொட்டிடு முரசுகொட்டிடு
கொதித்த குருதி கொப்புளித்து மேலிட
கோட்டை பிடித்த கொடிநாட்டி
கோல்பிடித்து அரசாளும்
கோமான் இனி குப்பனும் சுப்பனும் தான்
என்பதை கொட்டிடு முரசுகொட்டிடு.

*வே.செந்தில்குமரன்*
*முதுகலை முதலாம் ஆண்டு,*
*இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை,*
*அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.*

## நண்பன்



பள்ளியில் பார்த்து சேர்ந்து கொண்ட முதல் முகம் இவன்

நான் செய்யும் தவறுகளை சுட்டி காட்டுவதும்,என்னை கெடுப்பதும் இவன்

ஆசிரியர்களிடம் உருப்பிடாதவர்கள் என்று பெயர் வாங்கிகொடுத்ததும் இவன்

வீட்டிற்கு வரும் பொழுது சிறந்த உபசரிப்பை என்னிடம் இருந்து பறித்துக்கொள்வதும் இவன்

உதவி என்று செல்போனை எடுக்கும்பொழுது முதல் உரிமை எடுத்துக்கொள்வதும் இவன்

காமம் என்பதையும் கருணை என்பதையும் கற்றுத் தந்ததும் இவன்

என் காதலுக்கு தூதாகவும், என் சேட்டைகளுக்கு காவலாகவும் இருப்பதும் இவன்

மொத்தத்தில் என் உறவில்லா உறவாய் இருப்பதும், என் உயிரை எடுப்பதும் இவன் என் நண்பன்!

*அ.சரண்*
*முதுகலை முதலாம் ஆண்டு,*
*இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை,*
*அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.*

# மனித வளர்ச்சிக்கான இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் ஆய்வுகள்

ஆய்வு என்பது வெறும் உண்மைகளை மட்டும் கண்டுபிடிப்பது அல்ல. அப்படி ஆய்வின்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளைச் சமூகத்திற்கும், பொதுமக்களுக்கும் கொண்டு சேர்க்கும்பொழுதே ஒரு ஆய்வு செய்யப்பட்டதின் முழுமையான நோக்கம் வெற்றியடைகிறது. அந்தவகையில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து துறைகளும் தங்களின் ஆய்வுகளின் மூலம் இந்த உலகத்தையும் அதைச் சார்ந்த மக்களையும் மேம்படுத்த பல ஆய்வுகளைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல்துறை மக்களுக்கும் சமூகத்திற்கும் உடனடியாக பயன்தரும் ஆய்வுகளையும் தேச மற்றும் உலகத்தின் வளர்ச்சிக்கான ஆய்வுகளை தங்களின் மாணவ மாணவிகளின் மூலம் நடத்தி அதை இந்த உலகம் அறிய கொண்டு சேர்க்கிறார்கள்.

இந்த துறையில் பயிலும் மாணவ மாணவிகள் இதுவரை கீழ்க்கண்ட ஆய்வுகளை சிறப்பாக செய்து முடித்துள்ளார்கள்.

சமூகத்தின் மீதான ஊடகங்கள் மற்றும் பத்திரிக்கைகளின் தாக்கம், மாணவ மாணவியர்களின் மீதான ஊடகங்கள் மற்றும் பத்திரிக்கைகளின் தாக்கம், ஊடகங்களால் உண்டாகும் வாழ்வியல் மாற்றம் மற்றும் வளர்ச்சி, ஊடகங்கள் மற்றும் பத்திரிக்கைகளால் உண்டாகும் நன்மை தீமைகள், மின்னணு ஊடகங்களால் உண்டாகும் மாற்றம் மற்றும் தாக்கம், மக்களின் சமூக ஊடகங்களின் பயன்பாடு மற்றும் தாக்கம், மாணவ மாணவியர்களின் சமூக ஊடகங்களின் பயன்பாடு மற்றும் தாக்கம், தொலைக்காட்சி மற்றும் வானொலிகளின் பயன்பாடு மற்றும் தாக்கம், சமுதாய வானொலி, ஊடக விளம்பரங்களின் பயன்பாடு மற்றும் தாக்கம், திரைப்படங்களின் வளர்ச்சி மற்றும் தாக்கம், மாற்று ஊடகங்களின் வளர்ச்சி மற்றும் தாக்கம் , புகைப்படங்களின் தன்மை மற்றும் அழகியல் கோட்பாடுகள், ஊடக படைப்பில் உள்ள சமூக நீதி, மின்னணு ஊடகமும் அச்சு ஊடகமும், ஊடகங்களில் உருவகப்படுத்தப்படும் வன்முறை மற்றும் எதிர்வினை நிகழ்வுகள், தொழில்நுட்பங்களும் தற்காலிக ஊடகங்களும், உளவியல்சார் பிரச்சனைகளும் ஊடகங்களும், கைப்பேசிகளும் ஊடகங்களும், திரை விமர்சனங்கள், ஊடக படைப்புகளில் உள்ள கருத்தாய்வுகள், பெண்களும் ஊடகங்களும், குழந்தைகளும் ஊடகங்களும், மூத்த குடிமக்களும் ஊடகங்களும், கலாச்சாரமும் ஊடகங்களும், கலாச்சாரமும் அதனைச் சார்ந்த பகுதிகளும், ஊடகமும் மக்கள் தொடர்பும், ஊடகமும் மனிதவள மேம்பாடும்

இதுபோன்ற ஆய்வுகளை இந்தத் துறையில் பயிலும் மாணாக்கர்கள் தனி ஒருவராக, அறிவியல் பூர்வமாக ஆசிரியர் வழிகாட்டுதலுடன் செய்து ஆய்வைப் பற்றி முழுமையாக தெரிந்து கொள்கிறார்கள்.

இதன் மூலம் ஆய்வு பட்டப்படிப்பிற்கு அடுத்து செல்ல நல்லதொரு வாய்ப்பாக அமைகிறது. மேலும் ஊடகத்துறையில் உள்ள ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பணியில் ஈடுபட இதுவும் ஒரு வாய்ப்பை அமைத்துக் கொடுக்கிறது.

பா. நாகவள்ளி
Teaching Assistant,
இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

# உலகம் சுற்றிய முதல் தமிழன்

அண்ணாமலை கருப்பன் செட்டியார் என்கிற இயற்பெயர் கொண்ட ஏ.கே. செட்டியார் காரைக்குடி அருகில் உள்ள கோட்டையூரில் நவம்பர் 3, 1911 இல் செல்வ செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்தவர். அவரது இளமைப் பருவத்தின் ஒரு பகுதி செட்டிநாட்டிலும், பள்ளிப் பருவம் திருவண்ணாமலையிலும் கழிந்தது. பள்ளிக்காலத்திலேயே காந்தியின் மீது ஈடுபாடு கொண்டவராகவும் அவரை மானசீக குருவாக ஏற்றுக் கொண்டவராகவும் விளங்கினார். சுதந்திரப் போராட்டம் அவரை ஈர்த்தது. கூட்டங்களில் பேசுவது எழுதுவது ஆகியவற்றில் அவரது ஆர்வத்தை கண்ட பெற்றோர் அவர் ஒரு போராளியாக சிறைச்சொல்லக்கூடும் என அஞ்சி அவரை பர்மாவின் ரங்கோனுக்கு அனுப்பினார்கள். ரங்கோனில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வணிக சங்கம் நடத்தி வந்த தனவணிகன் என்ற இதழில் இதழுக்கு தனது இருபதாவது வயதில் ஆசிரியராய் ஆனார். பத்திரிக்கை பணி அவருக்கு ஒளிப்பட கலையின் மீது ஈடுபாட்டை உருவாக்கியது. அங்கிருந்து 1936 இல் ஜப்பானுக்குச் சென்று அங்கே இம்பீரியல் ஆர்ட்ஸ் அகாடமியில் சேர்ந்து மூன்று மாத காலம் ஒளிப்பட கலையை நுணுக்கமாக கற்றுக் கொண்டார்.

ஜப்பானில் ஒளிப்பட கலையை கற்றுக் கொண்டிருந்த தருணத்தில் பல இடங்களுக்கும் சென்று அவர் கண்டதையும் கேட்டதையும் பயன அனுபவ கட்டுரையாக எழுதி, செல்லும் இடங்களில் தான் எடுத்த ஒளிப்படங்களை இணைத்து தனவணிகனுக்கு அனுப்பினார். அதில் அவரது கட்டுரைகளை வாசித்த வாசகர்கள் ஜப்பானுக்கே போய் பார்த்தது போல் உள்ளது என்று பாராட்டினார்கள். இப்பாராட்டு பெற்ற அவரது முதல் பையனை எழுத்துக்கள் 'ஜப்பான் கட்டுரைகள்' என்கிற தலைப்பில் அவரது முதல் புத்தகமாக வெளிவந்தது. அதன் பின்னர் தனது ஒளிப்படக் கலை தொடர்பான படிப்பில் மேலும் நிபுணத்துவம் பெற விரும்பிய அவர் ஜப்பானிலிருந்து அமெரிக்காவின் நியூயார்க் நகருக்கு பயணம் ஆனார். அங்கே ஒளிப்பட கலையில் பட்டய படிப்பை முடித்து 1936 இந்தியா திரும்பும் வழியில் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே புகழ்பெற்ற ஆவணப்பட இயக்குனராக இருந்த ஜான் கிரிசனின் ஐந்து ஆவணப் படங்களை காணும் வாய்ப்பு ஏகே செட்டியாருக்கு அமைந்தது என்றாலும் அவருக்கு அப்போது ஆவணப் படங்களை எடுக்க வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படவில்லை. பின்னர் இங்கிலாந்து, அயர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு பயணித்த அவர் அந்த அனுபவங்களை பயண கட்டுரைகளாக ஒளிப்படங்களுடன் பல்வேறு இதழ்களில் பதிவு செய்தார். அவையெல்லாம் தொகுக்கப்பட்டு 'உலகம் சுற்றும் தமிழன்' என்கிற தலைப்பில் புத்தகமாக வெளிவந்தது..

29 வயதே நிரம்பி இருந்த இளம் தமிழர் ஒருவர் நவீன இந்தியாவின் வருத்த தனது எளிய வாழ்க்கையின் வழியாக மாற்றி எழுதிய மகாத்மா காந்தி என்னும் மாமனிதரை குறித்து ஒரு முழுமையான ஆவண படத்தை உருவாக்கினார். அவர்தான் தமிழ் பயண இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஏ.கே.செட்டியார் பெரும்பொருளை செலவிட்டும் பெரும் அர்ப்பணிப்பை கொடுத்தும் உருவாக்கியது மகாத்மா காந்தியின் ஆவணப்படம்.

அந்த ஆவண படத்துக்காக 1937 'டாக்குமெண்ட்ரி ஃபிலிம்ஸ் லிமிடெட்' என்கிற நிறுவனத்தை தொடங்கினார். அவர் தென்ஆப்பிரிக்காவில் மோகன்தாஸ் காந்தியின் போராட்டத்தில் தொடங்கி காந்தியின் பழைய திரைப்படத் தொகுப்புகள் எங்கெல்லாம் இருக்கின்றன அவற்றை சேகரித்து சுதந்திரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் தற்போதைய இந்தியாவை மகாத்மாவுடன் இணைக்க முடிவு செய்தார். இதற்காக பல்லாயிரக்கணக்கான மைல்கள், 4 கண்டங்களில் உலகப் போருக்கு இடையில் பயணம் செய்து நூற்றுக்கும் அதிகமான புகைப்பட ஒழிப்பதிவு கலைஞர்களிடமிருந்து காட்சிப்படச் சூழல்களை தேடி தேடி சேகரித்தார். இதற்காக அவர் பயணக் கப்பலில் பயணிக்கும் போது தனது சேகரிப்புகளை சரக்கு கப்பலில் தனியாக அனுப்பி வைப்பார். தன் பயணம் செய்யும் கப்பலில் ஒரு கால் போரில் தகர்க்கப்பட்டால் தனது சேகரிப்புக்கு எதுவும் ஏறக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாட்டை அவர் செய்திருந்தார். அவர் சேகரித்த ஐம்பதாயிரம் அடி பதிவுகளில் இருந்தான் இரண்டு மணி நேர இந்தியாவின் முதல் காந்தி ஆவணப்படத்தை உருவாக்கினார். அவற்றில் காந்தியின் பல அரிய ஒளிப்படங்களும், காட்சிகளும் இடம் பெற்றிருந்தன. சின்ன அண்ணாமலை தமிழ் பண்ணை பதிப்பகத்தை தொடங்க கை கொடுத்த மூவரில் ஒருவராக விளங்கிய ஏ.கே.செட்டியார் 40 ஆண்டுகள் குமரி மலர் ஆவண இதழை பதித்த சாதனை விரிவாக தனியே எழுதப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்த ஆவணப்படம் மகாத்மா காந்தி அவரது வாழ்க்கையின் சம்பவங்கள் என்கிற தலைப்பில் ஆகஸ்ட் 1940 இல் வெளிவந்தது. இப்படம் தமிழ்நாட்டிலும், பர்மாவிலும், மலேசியாவிலும் ரகசியமாக திரையிடப்பட்டது. 1941 இல் தெலுங்கு மொழியிலும் டப் செய்யப்பட்டது. இப்படத்தை கைப்பற்றி அளிக்க விரும்பியது ஆங்கிலேய அரசு விரைவாக படச்சுருளை ரகசியமாக பாதுகாத்து வந்தார் ஏ கே செட்டியார். பின்னர் நாடு விடுதலை அடைந்த இரவில் ஆகஸ்ட் 14, 1947 டெல்லியில் காந்தி ஆவணம் ஆவணப்படம் சுதந்திரமாக திரையிடப்பட்டது.

க. நிரோஷா தேவி
Teaching Assistant
இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

# Manjummel Boys: Review

## மலைகளின் இளவரசியும் மல்லு நண்பர்களின் த்ரில் அனுபவங்களும்!




கேரளத்தின் கொச்சியில் உள்ள மஞ்சுமெல் பகுதியிலிருந்து நண்பர்கள் குழு ஒன்று கொடைக்கானலுக்குச் சுற்றுலா செல்கிறது. அங்கு எதிர்பாராத விபத்து ஒன்றை அக்குழு சந்திக்கிறது. அதிலிருந்து அந்த நண்பர்கள் எப்படி மீள்கின்றனர் என்பதுதான் 'மஞ்சுமெல் பாய்ஸ்' திரைப்படத்தின் ஒன்லைன்.

பல்வேறு குடும்பப் பின்னணிகளைக் கொண்ட 10-க்கும் மேற்பட்டவர்களைக் கொண்டது 'மஞ்சுமெல் பாய்ஸ்' நண்பர்கள் குழு. இவர்கள் அனைவரும் கயிறு இழுத்தல் போட்டியில் அனுபவம் கொண்டவர்கள். கோவாவுக்கு சுற்றுலா செல்ல வேண்டும் என்ற இவர்களது கனவு கரைந்துபோக கொடைக்கானலுக்குச் செல்ல முடிவு செய்கின்றனர். ஒருவழியாக டிரைவருடன் சேர்த்து 11 பேர் ஒரு குவாலிஸ் காரில் இடித்துப்பிடித்து உட்கார்ந்து கொண்டு பழநி வழியாக கொடைக்கானல் செல்கின்றனர். அங்குள்ள லேக், பூங்கா, பைன் மரக்காடுகள், வியூ பாய்ண்ட் என எல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு அங்கிருந்து ஊருக்கு கிளம்புகின்றனர். அப்போது நண்பர்களில் ஒருவன் குணா குகையை நினைவுபடுத்த அதையும் பார்த்துவிட்டுச் செல்ல முடிவெடுக்கின்றனர். அங்கு வனத்துறை அனுமதித்த இடத்தைத் தாண்டி, தடை செய்யப்பட்ட பகுதிகளுக்கு பயணித்து பரவசம் அடைகிறது மஞ்சுமல் பாய்ஸ் குழு. அப்போது எதிர்பாராத விதமாக இக்குழுவைச் சேர்ந்த சுபாஷ் (ஸ்ரீநாத் பாஷி) குகையின் பாறை இடுக்கில் உள்ள ஒரு 900 அடி பள்ளத்தில் விழுந்து விடுகிறார். பின்னர் என்ன நடக்கிறது என்பது படத்தின் திரைக்கதை.

இயக்குநர் சிதம்பரம் எழுதி இயக்கியிருக்கும் மலையாளத் திரைப்படம் 'மஞ்சுமெல் பாய்ஸ்'. இது ஒரு உண்மைச் சம்பவத்தை தழுவி எடுக்கப்பட்டுள்ள சர்வைவல் த்ரில்லர் திரைப்படம். கொண்டாட்டமும் கும்மாளமும் நிறைந்து கிடக்கும் நண்பர்கள் பட்டாளத்தின் நட்பு, சாத்தானின் சமையலறை (Devil's Kitchen - குணா குகையின் பழைய பெயர்) ஆழத்தைவிட ஆழமானது என நிறுவியிருக்கிறார் இயக்குநர். பத்துக்கும் மேற்பட்ட நண்பர்கள் கொண்ட குழுவுக்கு கிளைக்கதைகளை உருவாக்கி பார்வையாளர்களுக்கு அயற்சியை ஏற்படுத்தாமல் சொல்ல வந்ததை நறுக்கென சொல்லியிருக்கிறார். நிகழ்கால சம்பவத்துடன் தொடர்புப்படுத்த பயன்படுத்தப்பட்டிருக்கும் நண்பர்களின் பிளாஷ்பேக் காட்சிகள் உறுத்தலாக இல்லை.

படத்தின் முதல் பாதியில் நம்மை ஒரு சுற்றுலா செல்வதற்காக மகிழ்ச்சியோடு தயார்படுத்தும் இயக்குநர். இரண்டாம் பாதியில் எதிர்பாராத நேரத்தில் உருவாகும் இக்கட்டான சூழலை எதிர்கொள்ள தேவையான மன உறுதியைக் கற்றுத் தந்திருக்கிறார். 29படத்தில் பணியாற்றிய பலரும் தங்களது பங்களிப்பை சிறப்பாக செய்துள்ளனர். ஸ்ரீநாத் பாஷி, சவுபின் ஷகிர் இருவரும் மீண்டும் ஒருமுறை தங்களது நேர்த்தியான நடிப்பை வெளிப்படுத்தி உள்ளனர். சைஜு காலித்தின் கேமிராவும் அஜயன் சலிஷேரியின் கலை இயக்கமும் பிரமிக்கச் செய்கிறது. எது உண்மையான குகை எது செட் என தெரியாத அளவுக்கு இருவரும் உழைத்திருக்கின்றனர்.

சுஷின் ஷியாமின் பின்னணி இசையும் விவேக் ஹர்ஷனின் கட்ஸும் படத்தை விறுவிறுப்பாக்குகின்றன. தமிழில் சந்தானபாரதி இயக்கத்தில் கமல் நடித்த குணா திரைப்படக் குழுவினருக்கு நன்றி என்ற கார்டு உடன் தான் இந்தப்படமே தொடங்குகிறது. குறிப்பாக இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. கண்மணி அன்போடு காதலன் பாடல்தான் டைட்டில் கார்டில் வருகிறது. படத்தின் முக்கியமான ஒரு இடத்தில் இந்தப்பாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதி வரும், அது படம் பார்க்கும் அனைவருக்கும் கூஸ்பம்ப்ஸைத் தருகிறது.

ஜோ படத்தில் இடம்பெற்றுள்ள 'உருகி உருகி போனதடி' பாடலும், "எண்ணமே என் உன்னால" என்ற கட்சி சேர எனும் ஆல்பம் பாடல் ஒன்றும்தான் இன்றைக்கு டிரெண்டில் இருக்குற காதல் பாடல்கள். இன்ஸ்டா, ஸ்பாட்டிஃபை, முகநூல் என எங்குபார்த்தாலும் இந்தப் பாடல்களைக் கேட்காமல் இருக்க முடியாது. இதேபோல் டேப் ரிக்கார்டர் காலத்தில் எங்கு பார்த்தாலும் கேட்ட பல பாடல்கள், இன்றும் பலரது இன்ஸ்டா ரீல்ஸ்களின் வழியே உயிர் பிழைத்துக் கிடக்கிறது. அந்தப்பட்டியலில் குணா திரைப்படத்தில் வந்த "கண்மணி அன்போடு காதலன்" பாடல் நிச்சயம் இருக்கும்.

இப்பாடல் காலத்தைக் கடந்து பலரது மனங்களில் நங்கூரமிட்டதில் கமல்ஹாசன் - இளையராஜாவுக்கு மிக முக்கியப் பங்கு உண்டு. இந்தப் படத்தின் கம்போசிங்கின் போது, காதலிக்கு காதலன் கடிதம் எழுதும் சிச்சுவேஷனுக்கு "அன்பே அன்பே நலம்தானா...... அங்கே அங்கே சுகம்தானா" என்று இளையராஜா மெட்டமைத்திருப்பார். கதைப்படி குணா மனநலபிறழ்வு கொண்டவர். அவரது அணுகுமுறை இயல்பான வடிவில் இருக்கமுடியாது. மனதில் நினைப்பதை அப்படியே சொல்ற மாதிரி ஒரு பாட்டு வேண்டும் என்ற கமலின் வேண்டுகோளை ஏற்று உருவாக்கப்பட்ட பாடல்தான் கண்மணி அன்போடு காதலன் பாடல்.

மனிதர் உணர்ந்துகொள்ள இது மனித காதல் அல்ல... அதையும் தாண்டி புனிதமானது! என்று இந்தப் பாட்டில் வரும் இவ்வரிகள்தான் அந்தப்படத்தின் ஒட்டுமொத்த கதையின் அடிநாதம். அதுவும் கமல் அந்த 'அதையும்' என்ற வார்த்தையை உச்சரிக்கும் ஓசையின் அளவில் நாயகி மீதான தனது காதலை பாடலைக் கேட்கும் ஒவ்வொருவரின் மனங்களிலும் வேரூன்றிடச் செய்திருப்பார். சினிமா என்பது ஒலியும் ஒளியும் என்பதை நன்கு அறிந்தவர் கமல். பாடல் உருவாக்கத்தில் அவர் மேற்கொண்ட சிரத்தைப் போலவே, பாடலுக்கான லொகேசனையும் தேர்ந்தெடுத்திருப்பார். அதனால்தான் 33 வருடங்கள் கழித்து அந்தப் பாடலைக் கேட்கும்போது அகமும் புறமும் ஈரம் கொள்கிறது.

மர்மங்களை மவுனித்துக் கொண்ட மலைப்பிரதேசத்தின் குகை ஒன்றில் இந்தப்பாடல் எடுக்கப்பட்டிருக்கும். பறவைகளின் கீச்சொலியும், பாறைகளின் இறுக்கமும், குகைகளின் இருண்மையும், அசைவற்றுக் கிடக்கும் மரங்களும், கிளைகளும், பாறைகளில் படிந்துக்கிடக்கும் பாசி போல அந்தப் பாடலும், அதில் வரும் வசனங்களும் காட்சிகளும் இன்றளவும் நம் நினைவுகளில் அப்பிக்கிடக்கிறது. இத்தகைய தாக்கத்தின் நீட்சியான இயக்குநர் சிதம்பரத்தின் இந்த 'மஞ்சுமெல் பாய்ஸ்' திரைப்படம் பார்வையாளர்களுக்கு நல்லவொரு திரையனுபவத்தைக் கொடுக்கிறது.

M. ஹரி பாஸ்கர்
Teaching Assistant
இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

# Indian Sports in 2024:
## An Year of Achievements and Challenges

In 2024, Indian sports witnessed a blend of remarkable achievements and ongoing challenges. Despite the disruptions caused by the global pandemic, Indian athletes showcased their talent on both national and international platforms, bringing pride to the nation. Here are some highlights from the world of Indian sports in 2024:

**Olympic Glory:**

The year began with a historic moment at the Winter Olympics in Beijing, where Indian athletes secured their first-ever medal in the sport of skiing. This achievement marked a significant milestone in India's winter sports journey, inspiring a new generation of athletes to excel in cold-weather disciplines.

**Cricketing Triumphs:**

In cricket, India continued its dominance on the world stage, with the men's team clinching major victories in bilateral series and tournaments. The women's team also made significant strides, showcasing their skill and determination in various international competitions.

**Football Revolution:**

The year 2024 saw a resurgence in Indian football, with the national team putting up strong performances in regional and international matches. The emergence of young talent and the development of grassroots programs signaled a promising future for the sport in the country.

**Challenges and Opportunities:**

Despite these achievements, Indian sports also faced several challenges in 2024. Issues such as lack of infrastructure, inadequate funding, and limited access to training facilities continued to hinder the growth of sports in the country. However, efforts were made at both the governmental and organizational levels to address these challenges and create a more conducive environment for athletes.

**Future Prospects:**

Looking ahead, Indian sports are poised for further growth and success. With the government's focus on promoting sports at the grassroots level and initiatives to support elite athletes, the future looks promising for Indian sports. The upcoming events such as the Commonwealth Games and the Asian Games provide an opportunity for Indian athletes to shine on the global stage.

In conclusion, 2024 was a year of achievements and challenges for Indian sports. While the country celebrated the success of its athletes, there is a recognition of the need to address the underlying issues to ensure sustained growth and development. With the right support and resources, Indian sports have the potential to reach new heights in the years to come.

Varsha U
I M.A J&MC
Dept. of Journalism and Mass communication
Alagappa University Karaikudi

“My Happiness is boundless, limitless, because my happiness does not consist naturally in my own happiness, but my happiness consists in the happiness of the thousands of students young and old, boys and girl that read in our vast educational campus”

- Dr.RM.Alagappa Chettiar






**The Editor in Chief**
**Ithazhi E Magazine**
**Department Of Journalism And Mass  Communication**
**Alagappa University, Karaikudi 630 003**
**email: jmc@alagappauniversity.ac.in**
**Phone:04565 223267**